**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், ஆத்தூர்**
**முன்னிலை திரு.C. உதயசுந்தரம்.,பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்–2, ஆத்தூர்.**

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07ம் நாள் செவ்வாய்க்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 161/2024**

**(CNR No) TNSA140020052024**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக – காவல் உதவி ஆய்வாளர்,<br>தம்மம்பட்டி காவல் நிலையம்.<br>குற்ற எண். 84/2023 |
| // எதிர் // | | |
| எதிரி | – | வெங்கடேஷ்,<br>த/பெ. செந்தில்குமார் |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி வெங்கடேஷ் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 323, 506(1) IPC, 4 of TNPHW Act–ன் கீழும், |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி வெங்கடேஷ் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 323, 506(1) IPC, 4 of TNPHW Act–ன் கீழும் |
| தீர்மானம் | – | இறுதியாக எதிரி வெங்கடேஷ் மீது இதச பிரிவுகள் 341, 506(1)–ன் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாக இந்நீதிமன்றம் முடிவுசெய்து மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை பிரிவு 248(1) Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.<br><br>மேலும் எதிரி வெங்கடேஷ் அ.த.சா.–1ஐ தேவிடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டியும், தலை முடியை பிடித்து இழுத்து வலது பக்க காதின் மீது அடித்தார் என்பது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 4 of TNPHW Act–ன் படியான |

| | | |
|---|---|---|
| | | குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.<br><br>எதிரியின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. எதிரிக்கு நன்னடத்தை சட்டம் 1958–ன் படியான விதிகள் பொருந்துமா என்று ஆராய்கையில் எதிரி மீது வேறு குற்றவழக்குகள் இல்லை என்பதாலும், எதிரியின் குடும்பம் அவரை நம்பியே இருப்பதாலும், எதிரியின் குடும்ப சூழ்நிலை, வயது, எதிர்காலம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு ஆராய்கையில் எதிரி வெங்கடேஷ் குற்றவாளி நன்னடத்தை சட்டத்தின் கீழ் மன்னித்து விடுதலை செய்தால் இனிவரும் காலங்களில் அவர் திருந்தி வேறு குற்ற சம்பவங்களில் ஈடுபடாமல் இருக்க ஒரு வழியாக இருக்குமென இந்நீதிமன்றம் முடிவுசெய்து எதிரி வெங்கடேஷ்–ஐ குற்றவாளி நன்னடத்தை சட்டம் பிரிவு 4–ன் கீழ் மன்னித்து கீழ்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் விடுதலை செய்கிறது.<br><br>எதிரி வெங்கடேஷ் இனிவரும் காலங்களில் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடக்கூடாது என்றும், ஒரு வருட காலத்திற்கு நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் அவர்கள் இருக்கவேண்டும் என்றும், மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாதத்தின் முதல் வேலைநாட்களில் நன்னடத்தை அலுவலர் முன்பு ஆஜராக வேண்டும் என்றும், நன்னடத்தை அலுவலர் 3 மாதங்களுக்கு ஒரு முறை இந்நீதிமன்றத்திற்கு எதிரி வெங்கடேஷ் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், எதிரி வெங்கடேஷ் சொந்தமாகவும் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | இந்நீதிமன்ற ஆள்வரை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடம் கொண்ட ஒரு நபருடனும் ரூ.10,000/-க்கு எந்த குற்ற செயலிலும் ஈடுபடாமல் அமைதிபேணுவேன் என்று ஒருவார காலத்திற்குள் பிணை பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.<br><br>மேலும் கண்காணிப்பு உத்தரவு நகலை 14 நாட்களுக்குள் சேலம் நன்னடத்தை அலுவலர் திருமதி.யமுனாபிரியா அவர்களிடம் எதிரி வெங்கடேஷ் ஆஜராகி கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>மேற்படி நன்னடத்தை கண்காணிப்பு காலக்கட்டத்தில் எதிரி வெங்கடேஷ் வேறு ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபட்டாலோ அல்லது மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை பின்பற்ற தவறினாலோ எதிரி வெங்கடேஷ்-க்கு இதசபிரிவு 294(பி)-ன் படியான குற்றத்திற்கு 3 மாதம் சாதாரண சிறைதண்டனையும், மேலும் எதிரி வெங்கடேஷ்-க்கு இதசபிரிவு 323-ன் படியான குற்றத்திற்கு ஒரு வருடம் சாதாரண சிறை தண்டனையும், மேலும் ரூ.1000/- அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் ஒரு மாதம் சிறைதண்டனையும், மேலும் எதிரி வெங்கடேஷ்-க்கு 4 of TNPHW Act-ன் படியான குற்றத்திற்கு ஆறு மாதம் சாதாரண சிறை தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் பிரிவு 248(2) Cr.P.C-ன் கீழ் உத்தரவிடுகிறது. |
| புகார் நாள் | – | 26.04.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | 26.04.2023 |
| பிணையில் சென்ற நாள் | – | 03.05.2023 |

| | | |
|---|---|---|
| கோப்பு நாள் | – | 28.05.2024 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 25.04.2025 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 17.02.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 07.04.2026 |

எதிரியின் மீதான இந்த வழக்கானது இந்நீதிமன்ற கோப்பிற்கு கடந்த 28.05.2024ம் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசுத்தரப்பில் அறிவார்ந்த அரசு குற்றத்துறை வழக்குரைஞர் நிலை– 2 அவர்களும், எதிரி தரப்பில் அறிவார்ந்த வழக்குரைஞர். திரு.P.முத்துகுமார் அவர்கள் ஆஜராகி எடுத்துரைக்க இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டும் இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1) கடந்த 23.04.2023ம் தேதி பகல் 17.30 மணிக்கும் தம்மம்பட்டி காவல் நிலையம் சரகம், செந்தாரப்பட்டி, வாதி தாய் வீட்டிற்கு சென்றிருந்ததாகவும், அப்போது பாத்ரூம் சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வரும் எதிரி வெங்கடேஷ், வாதியை வழிமறித்து நிறுத்தி ஏண்டி தேவிடியா என் மனைவி வளைக்காப்புக்கு வரவில்லை என்று கேட்டதற்கு, வாதி என் அம்மாவிடம் சொல்லியிருந்தால் அவர்கள் வந்திருப்பார்கள் எதுக்கு வழிமறித்து கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும், மேற்படி பொதுநோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு எதிரி வெங்கடேஷ், வாதியின் கையை பிடித்து இழுத்து கண்ணத்தில் ஓங்கி அடித்து வாதிக்கு ஊமைக்காயம் மற்றும் உடல்வலியை ஏற்படுத்தினார் என்றும், மேற்படி பொதுநோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு எதிரி வெங்கடேஷ், வாதி பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி பெண்ணின் மானத்திற்கு பங்கம்

விளைவிக்கும் செயலை செய்தார் என்றும், மேற்படி பொதுநோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு, எதிரி வெங்கடேஷ், வாதியை பார்த்து இன்னைக்கு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி வெங்கடேஷ் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506 (1) IPC மற்றும் 4 of TNPHW Act–ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தம்மம்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் எதிரி மீது ஒரு குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2) குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் சார்ந்திருக்கும் வழக்காவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் நகல்கள் கட்டணமின்றியும் காலதாமதமின்றியும் குவிமுச பிரிவு 207–ன்படி எதிரிக்கு வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிரியிடம் குற்றம் பற்றி வினவ எதிரி தன் மீதான சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506 (1) IPC மற்றும் 4 of TNPHW Act–ன் படியான குற்றங்களை மறுத்தார். வழக்காவணங்களை பரிசீலனை செய்த பின்பும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டபின்பும் எதிரி வெங்கடேஷ் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506 (1) IPC மற்றும் 4 of TNPHW Act–ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கிக் கூறி வினவ எதிரி அக்குற்றச்சாட்டினையும் மறுத்தார்.

4). எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான வழக்கை நிருபிக்கும் விதமாக அ.த.சா.1 முதல் அ.த.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்_பின்வருமாறு**

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.த.சா.1 முதல் அ.த.சா.7 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் கொடுத்த அ.த.சா.1

சந்தியா இவ்வழக்கு சம்பவத்தை பற்றியும், சம்பவத்தில் தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும், சம்பவத்தை கேள்விபட்ட சாட்சிகளான அ.த.சா.2 நல்லுசாமி, அ.த.சா.3 முத்தையன், அ.சா.த.4 லூர்துமேரி ஆகியோர்கள் சம்பவத்தை கேள்விபட்டது பற்றியும், மகஜர் சாட்சியான அ.த.சா.5 கலியம்மாள் மகஜர் சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்தது பற்றியும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.த.சா.6 விக்னேஷ் சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், புலன் விசாரணை அதிகாரியான அ.த.சாத.7உதயகுமார் இவ்வழக்கில் விசாரணை மேற்கொண்டு எதிரி வெங்கடேஷ் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506 (1) IPC மற்றும் 4 of TNPHW Act–ன் படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தது தொடர்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6) அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியப் பகுதிகளை குவிமுச 313 (1) (ஆ) –ன் கீழ் விளக்கிக் கூறி கேள்வி கேட்க எதிரி தன் மீதான சாட்சியத்தை மறுத்தார். இது தன் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றும், தன் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7) **அரசுத்தரப்பு வாதம் பின்வருமாறு.**

அரசுதரப்பு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் அ.த.சா.1 முதல் அ.த.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களிலிருந்தும் எதிரி வெங்கடேஷ் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506 (1) IPC மற்றும் 4 of TNPHW Act–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது அதனால் அவர் தண்டிக்கத்தக்கப்படவேண்டியவர் என்று வாதிட்டார்.

8) ஆனால், எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிரி குற்றவாளி இல்லை என்றும், மேற்படி வழக்கின் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரி மீதான

குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் என்னவென்றால் எதிரி வெங்கடேஷ் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506 (1) IPC மற்றும் 4 of TNPHW Act–ன் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

10) இவ்வழக்கின் புகார்தாரர் சாட்சியான அ.த.சா.1 சந்தியா அவரது சாட்சியத்தில் கடந்த 23.04.2023 அன்று மாலை 05.30 மணியளவில் நான், எனது அம்மா வீட்டிற்கு வரும்பொழுது வெங்கடேஷ் வந்து என்னிடம், எதிரியின் மனைவிக்கு வளைகாப்பு என்று சொல்லி என்னை அழைத்தார் என்றும், அதற்கு நான், என் அம்மாவிடம் சொல்லுங்கள், எனது அம்மா வருவார், என்னால் வரமுடியவில்லை, நான் வரமாட்டேன் என்று சொன்னேன் அதற்கு எதிரி வெங்கடேஷ், என்னை என்றும், தேவடியா என்று கெட்டவார்த்தையால் திட்டி, நான் சொல்றன், நீ வரமாட்டியா என்று சொல்லிக்கொண்டே எனது முடியை பிடித்து இழுத்து வலதுபக்க காதின்மீது, அவரது கையால் அடித்துவிட்டார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

11) சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.த.சா.6 விக்னேஷ் அவர்களது சாட்சியத்தில் எனக்கு வழக்கு சம்பவத்தை குறித்து எதுவும் தெரியாது. நான் எதையும் பார்க்கவில்லை. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள். அடிச்சதை பார்த்தீர்களா என்று போலிசார், என்னை கேட்டார்கள், நான் பார்க்கவில்லை என்றுதான் சென்னேன் சொல்லி சாட்சியம் அளித்து, அரசு தரப்பு குற்றச்சாட்டிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

12) மேலும் கேள்விநிலை சாட்சிகளான அ.த.சா.2 நல்லுசாமி அவர்களது

சாட்சியத்தில் கடந்த 23.04.2023 அன்று எனது மருமகள் அவரது அம்மா வீட்டிற்கு சென்றிருந்தார் என்றும், அன்று மாலை 05.30 மணியளவில் பாத்ரூம் சென்றுவிட்டு, சந்தியா அவரது அம்மா வீட்டிற்கு வரும்பொழுது வெங்கடேஷ் எனது மருமகளை வழிமறித்து வெங்கடேசின் மனைவிக்கு வளைகாப்பு என்று சொல்லி அழைத்ததாகவும், அதற்கு எனது மருமகள் என்னால் வரமுடியாது என்று சொன்னதாகவும், அதனால் வெங்கடேஷ், நீ வந்து எனது மனைவியை வாழ்த்திட்டுபோ, நா உன்ன கல்யாணம் பண்ணிக்கிற என்று சொன்ன, நீதான் கேட்கல வேற ஒருத்தன கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிட்ட இருந்தாலும் நீயும் என்மனைவிதான், நீ வந்து வாழ்த்து சொல்லனும் என்று சொல்லி எனது மருமகளின் தலைமயிரை பிடித்து இழுத்து, காதின் மீது அடித்து என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கையிலதான் என்று சொல்லி மிரட்டியதாகவும், அதனால் பயந்துகொண்டு எனது மருமகள், எனது மகனுக்கு தகவல் சொல்லி, எனது மகன், என்னிடம் தகவல் சொன்னார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

13) மேலும் கேள்விநிலை சாட்சியான அ.த.சா.3 முத்தையன் அவர்களது சாட்சியத்தில் கடந்த 23.04.2023 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் நான் எனது தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தேன் என்றும், அப்பொழுது எனது மனைவி, எனக்கு போன் செய்து, சாட்சி சந்தியாவிடம், எதிரி வெங்கடேஷ் ஏண்டி தேவடியா, என் பொண்டாட்டி வளைகாப்பிற்கு நீ ஏன் வாழ்த்த வரல என்று கேட்டுள்ளார், அதற்கு சந்தியா உன் மனைவி வளைகாப்பிற்கு என் வீட்டில் உள்ளவர்களிடம் போய் சொல்லியிருந்தால் அவர்கள் வந்திருப்பார்கள் என்று சொல்லியுள்ளார், அதற்கு வெங்கடேஷ் எனக்கு சின்ன வயதிலிருந்தே உன் மேல ஆசை, நீதான் வேற பையன கல்யாணம் பண்ணிக்கிட்ட என்று சொல்லி சந்தியாவின் காதில் அடித்துள்ளார் என்றும், சந்தியா வலி தாங்கமுடியாமல் சத்தம் போடவே அக்கம் பக்கம் இருப்பவர்கள் வந்ததாகவும், அதற்கு பின்னிட்டு நீ இன்னிக்கு தப்பிச்சிட்ட என்னைக்கா இருந்தாலும் உன் சாவு என்கையிலதான் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றதாகவும் என்

மனைவி என்னிடம் தகவல் சொன்னார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

14) மேலும் மற்றொரு கேள்விநிலை சாட்சியான அ.த.சா.4 லூர்துமேரி அவர்களது சாட்சியத்தில் தேதி, மாதம் நினைவில்லை என்றும், சுமார் ஒரு வருடத்திற்கு மேல் இருக்கும், ஒருநாள் எனது மகள் சந்தியா இயற்கை உபாதை கழிக்க மாலை சுமார் 05.00–05.30 மணியளவில் சென்றார் என்றும், சென்றுவிட்டு வீட்டிற்கு வரும்பொழுது எதிரி வெங்கடேஷ், எனது மகளை வழிமறித்து என் பொண்டாட்டிக்கு வளைகாப்பிற்கு நீ ஏன் வாழ்த்த வரல என்று கேட்டுள்ளார் என்றும், அதற்கு சந்தியா உன் மனைவி வளைகாப்பிற்கு என் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் போய் சொல்லியிருந்தால் அவர்கள் வந்திருப்பார்கள் என்று சொல்லியுள்ளார், அதற்கு வெங்கடேஷ் நான் சின்ன வயசுல இருந்தே உன்னை காதலிச்சுக்கிட்டு இருக்கேன், எனக்கு உம்மேல ஆசை, நான் உன்ன விடமாட்டன் என்று சொல்லியும், வாடி தேவடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டி, என் மனைவியை வந்து வாழ்த்திட்டுபோ என்று கையை பிடித்து இழுத்ததாகவும், அதற்கு சந்தியா மறுத்ததால், வெங்கடேஷ், சந்தியாவின் முடியை பிடித்து இழுத்து, அவர் காதில் அடித்துள்ளார் என்றும், அதில் சந்தியாவின் காதில் அணிந்திருந்த தோடின் திருகாணி வளைந்து, காதில் வலி அதிகமாக இருப்பதாக என்னிடம் சொன்னார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

15) மேலும் பார்வை மகஜர் சாட்சியான அ.த.சா.5 கலியம்மாள் அவர்களது சாட்சியத்தில் கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பு சந்தியா என்ற பெண் வெளியே சென்றுவிட்டு வரும்பொழுது, எதிரி அவரது பொண்டாட்டிக்கு பொட்டு வைத்துவிட்டு போ என்று சொன்னதற்கு, சந்தியா எங்க வீட்டு பெரியவங்ககிட்ட சொல்லு என்று சொன்னதற்கு, எதிரி, சந்தியாவை கன்னத்தில் அடித்துவிட்டதால் அந்த பொண்ணு சத்தம் போட்டு ஓடிவருவதை பார்த்து நாங்கள் சென்று பார்த்தோம் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் புலன் விசாரணை அதிகாரியான அ.த.சா.7 உதயகுமார் அவர்களது சாட்சியத்தில் கடந்த 26.04.2023ம் தேதி மதியம் 01.30 மணியளவில் நான், தம்மம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளராக பணியில்

இருந்தபொழுது, ஆத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து முன்னதாக கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று நான் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சந்தியா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து, அதன் அடிப்படையில் தம்மம்பட்டி கவால் நிலைய குற்ற எண்.84/2023 சட்ட பிரிவுகள் 341, 294(b), 323, 506(1) இ.த.ச–யுடன் இணைந்த Sec 4 of TNPHW Act ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து குற்ற எதிரி வெங்கடேஷ் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தது தொடர்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16) எதிரி வெங்கடேஷ் மீது சுமத்தப்பட்ட இதசபிரிவு 294(பி)–ன் படியான குற்றச்சாட்டினை பொறுத்து ஆராய்கையில்**

அரசு தரப்பு சாட்சி–1 சந்தியா அவரது சாட்சியத்தில் கடந்த 23.04.2023 அன்று மாலை 05.30 மணியளவில் நான் எனது அம்மா வீட்டிற்கு வரும்பொழுது எதிரி வெங்கடேஷ் வந்து தன்னிடம் எதிரியின் மனைவிக்கு வளைகாப்பு என்று சொல்லி தன்னை அழைத்தார் என்றும், அதற்கு தான், என் அம்மாவிடம் சொல்லுங்கள், எனது அம்மா வருவார், என்னால் வரமுடியவில்லை, நான் வரமாட்டேன் என்று சொன்னேன் அதற்கு எதிரி வெங்கடேஷ் தன்னை தேவடியா என்று கெட்டவார்த்தையால் திட்டியதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.த.சா.1–ஐ, அ.த.சா.2 சாட்சிகளை எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யாதது எதிரிக்கு எதிராக உள்ளது. மேலும் அ.த.சா.1–ன் சாட்சியத்தை ஒத்தேற்கும் விதமாக அ.த.சா.3 மற்றும் அ.த.சா.4 ஆகியோர்கள் அவர்களது முதன்மை சாட்சியத்தில் எதிரி வெங்கடேஷ் அ.த.சா.1 சந்தியாவை தேவடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டியதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை பொறுத்தும் எதிரி தரப்பில் அ.த.சா.3 மற்றும் அ.த.சா.4 வரையிலான சாட்சிகளை சரிவர குறுக்கு விசாரணை செய்யாதது எதிரிக்கு எதிராக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிரி வெங்கடேஷ் அ.த.சா.1 சந்தியாவை கெட்ட வார்த்தையால் திட்டியதாக சொல்லி இதச பிரிவு 294(பி)–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் எவ்வித

சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17) எதிரி வெங்கடேஷ் மீது சுமத்தப்பட்ட இதசபிரிவு 506(1)–ன் படியான குற்றச்சாட்டினைப் பொறுத்து ஆராய்கையில்**

மேலும் அ.த.சா.1 சந்தியா தனது சாட்சியத்தில் எதிரி வெங்கடேஷ் கொலைமிரட்டல் விடுத்தாக சொல்லி சாட்சியம் அளிக்காத நிலையில் அ.த.சா. 2 நல்லுசாமி அவரது சாட்சியத்தில் வெங்கடேஷ், நீ வந்து எனது மனைவியை வாழ்த்திட்டுபோ, நா உன்ன கல்யாணம் பண்ணிக்கிற என்று சொன்ன, நீதான் கேட்கல வேற ஒருத்தன கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிட்ட இருந்தாலும் நீயும் என்மனைவிதான், நீ வந்து வாழ்த்து சொல்லனும் என்று சொல்லி எனது மருமகளின் தலைமயிரை பிடித்து இழுத்து, காதின் மீது அடித்து என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கையிலதான் என்று சொல்லி மிரட்டினார் என்பதும், மற்றும் அ.த.சா.3 முத்தையன் தனது சாட்சியத்தில் வெங்கடேஷ் எனக்கு சின்ன வயதிலிருந்தே உன் மேல ஆசை, நீதான் வேற பையன கல்யாணம் பண்ணிக்கிட்ட என்று சொல்லி சந்தியாவின் காதில் அடித்துள்ளார் என்றும், சந்தியா வலி தாங்கமுடியாமல் சத்தம் போடவே அக்கம் பக்கம் இருப்பவர்கள் வந்ததாகவும், அதற்கு பின்னிட்டு நீ இன்னிக்கு தப்பிச்சிட்ட என்னைக்கா இருந்தாலும் உன் சாவு என்கையிலதான் என்று மிரட்டினார் என்று சாட்சியமளித்திருப்பது ஏற்புடையதாக இல்லை. மேலும் அ.த.சா. 2 மற்றும் அ.த.சா.3–ன் சாட்சியங்களிலிருந்து வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்காத நிலையில் அ.த.சா.1 அளித்த தகவலின் பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளித்திருப்பதும், மேலும் அ.த.சா.1 ஆனவர் எதிரி தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளிக்காத நிலையில் அ.த.சா.2 மற்றும் அ.த.சா.3 ஆகியோர்கள் எதிரி அ.த.சா.1–ற்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லி சாட்சியம் அளித்திருப்பது ஏற்புடையதாக இல்லை. அ.த.சா.4 லூர்துமேரி அவர்கள் அவரது சாட்சியத்தில் எதிரி வெங்கடேஷ் அ.த.சா.1–ஐ கொலைமிரட்டல் விடுத்ததாகவோ, அதனால் அ.த.சா.1–ற்கு உயிர்பயம் ஏற்பட்டதாகவோ

சொல்லி சான்றுரைக்கவில்லை. மேற்படி கொலைமிரட்டல் விடுத்ததை நிரூபிக்கும் விதமாக எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. அரசு தரப்பில் எதிரி வெங்கடேஷ்–க்கு எதிராக இதச பிரிவு 506(1)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் அரசு தரப்பு சாட்சிகள் தங்களுக்கு எதிரி வெங்கடேஷ் கொலை மிரட்டல் விடுத்ததை நிருபிக்கும் விதமாக சாட்சியம் அளிக்காதது அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே அரசு தரப்பில் எதிரி வெங்கடேஷ் மீது சுமத்தப்பட்ட இதசபிரிவு 506(1)–ன் கீழான குற்றச்சாட்டானது நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18) **எதிரி வெங்கடேஷ் மீது சுமத்தப்பட்ட இதசபிரிவு 341–ன் படியான குற்றச்சாட்டினைப் பொறுத்து ஆராய்கையில்**

மேலும் அ.த.சா.1 சந்தியா தனது சாட்சியத்தில் எதிரி வெங்கடேஷ் தன்னை வழிமறித்ததாக சொல்லி சாட்சியம் அளிக்காத நிலையில் அ.த.சா. 2 நல்லுசாமி அவரது சாட்சியத்தில் கடந்த 23.04.2023 அன்று எனது மருமகள் அவரது அம்மா வீட்டிற்கு சென்றிருந்தார் என்றும், அன்று மாலை 05.30 மணியளவில் பாத்ரூம் சென்றுவிட்டு, சந்தியா அவரது அம்மா வீட்டிற்கு வரும்பொழுது வெங்கடேஷ் எனது மருமகளை வழிமறித்தார் என்றும், அ.த.சா.4 லூர்துமேரி தனது சாட்சியத்தில் சுமார் ஒரு வருடத்திற்கு மேல் இருக்கும், ஒருநாள் எனது மகள் சந்தியா இயற்கை உபாதை கழிக்க மாலை சுமார் 05.00–05.30 மணியளவில் சென்றார் என்றும், சென்றுவிட்டு வீட்டிற்கு வரும்பொழுது எதிரி வெங்கடேஷ், எனது மகளை வழிமறித்தார் என்று சாட்சியமளித்திருப்பது ஏற்புடையதாக இல்லை. மேலும் அ.த.சா.3 முத்தையன் அவரது சாட்சியத்தில் எதிரி வெங்கடேஷ் அ.த.சா.–1ஐ வழிமறித்ததாக சொல்லி சான்றுரைக்கவில்லை. மேற்படி வழிமறித்ததை நிரூபிக்கும் விதமாக எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. அரசு தரப்பில் எதிரி வெங்கடேஷ்–க்கு எதிராக இதச பிரிவு 341–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ள நிலையில் அரசு தரப்பு சாட்சிகள் அ.த.சா.1–ஐ எதிரி வெங்கடேஷ் வழிமறித்தார் என்பதை நிரூபிக்கும் விதமாக சாட்சியம் அளிக்காதது அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே அரசு தரப்பில் எதிரி வெங்கடேஷ் மீது சுமத்தப்பட்ட இதசபிரிவு 341–ன் கீழான குற்றச்சாட்டானது நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**19) எதிரி வெங்கடேஷ் மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவுகள் 323 IPC, 4 of TNPHW Act–ன் படியான குற்றச்சாட்டுக்களை பொறுத்து ஆராய்கையில்**

அ.த.சா.1 சந்தியா அவரது சாட்சியத்தில் கடந்த 23.04.2023 அன்று மாலை 05.30 மணியளவில் நான், எனது அம்மா வீட்டிற்கு வரும்பொழுது வெங்கடேஷ் வந்து என்னிடம், எதிரியின் மனைவிக்கு வளைகாப்பு என்று சொல்லி என்னை அழைத்தார் என்றும், அதற்கு நான், என் அம்மாவிடம் சொல்லுங்கள், எனது அம்மா வருவார், என்னால் வரமுடியவில்லை, நான் வரமாட்டேன் என்று சொன்னேன் அதற்கு எதிரி வெங்கடேஷ், என்னை என்றும், தேவடியா என்று கெட்டவார்த்தையால் திட்டி, நான் சொல்றன், நீ வரமாட்டியா என்று சொல்லிக்கொண்டே எனது முடியை பிடித்து இழுத்து வலது பக்க காதின்மீது, அவரது கையால் அடித்துவிட்டார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தை நிராகரிக்கும் விதமாக எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

20) மேலும் அ.த.சா.1 சந்தியா கூறியுள்ள சாட்சியத்தை ஒத்தேற்கும் விதமாக சம்பவ கேள்விநிலை சாட்சிகளான அ.த.சா.1–மாமனாரான அ.த.சா.2 நல்லுசாமி அவர்களது சாட்சியத்தில் வெங்கடேஷ், நீ வந்து எனது மனைவியை வாழ்த்திட்டுபோ, நா உன்ன கல்யாணம் பண்ணிக்கிற என்று சொன்ன, நீதான் கேட்கல வேற ஒருத்தன கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிட்ட இருந்தாலும் நீயும் என்மனைவிதான், நீ வந்து வாழ்த்து சொல்லனும் என்று சொல்லி எனது மருமகளின் தலைமயிரை பிடித்து

இழுத்து, காதின் மீது அடித்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தை நிராகரிக்கும் விதமாக எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

21) மேலும் அவரது மூத்தநாரானா அ.த.சா3 முத்தையன்–ம் அ.த.சா.1, அ.த.சா.2 சாட்சிகளின் ஒத்தேற்கும் விதமாக அவரது சாட்சியத்தில் எதிரி வெங்கடேஷ் ஏண்டி தேவடியா, என் பொண்டாட்டி வளைகாப்பிற்கு நீ ஏன் வாழ்த்த வரல என்று கேட்டுள்ளார், அதற்கு சந்தியா உன் மனைவி வளைகாப்பிற்கு என் வீட்டில் உள்ளவர்களிடம் போய் சொல்லியிருந்தால் அவர்கள் வந்திருப்பார்கள் என்று சொல்லியுள்ளார், அதற்கு வெங்கடேஷ் எனக்கு சின்ன வயதிலிருந்தே உன் மேல ஆசை, நீதான் வேற பையன கல்யாணம் பண்ணிக்கிட்ட என்று சொல்லி சந்தியாவின் காதில் அடித்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

22) அரசு தரப்பு சாட்சி. 1 கூறிய சாட்சியத்தை ஒத்தேற்கும் விதமாக அவரது அம்மாவான அ.த.சா.4லூர்துமேரி அவரது சாட்சியத்தில் வெங்கடேஷ் நான் சின்ன வயசுல இருந்தே உன்னை காதலிச்சுக்கிட்டு இருக்கேன், எனக்கு உம்மேல ஆசை, நான் உன்ன விடமாட்டன் என்று சொல்லியும், வாடி தேவடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டி, என் மனைவியை வந்து வாழ்த்திட்டுபோ என்று கையை பிடித்து இழுத்ததாகவும், அதற்கு சந்தியா மறுத்ததால், வெங்கடேஷ், சந்தியாவின் முடியை பிடித்து இழுத்து, அவர் காதில் அடித்துள்ளார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.த.சா.5 கலியம்மாள் அவரது சாட்சியத்தில் கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பு சந்தியா என்ற பெண் வெளியே சென்றுவிட்டு வரும்பொழுது, எதிரி அவரது பொண்டாட்டிக்கு பொட்டு வைத்துவிட்டு போ என்று சொன்னதற்கு, சந்தியா எங்க வீட்டு பெரியவங்ககிட்ட சொல்லு என்று சொன்னதற்கு, எதிரி, சந்தியாவை கன்னத்தில் அடித்துவிட்டதால் அந்த பொண்ணு சத்தம் போட்டு ஓடிவருவதை பார்த்து நாங்கள் சென்று பார்த்தோம் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

23) சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.த.சா.6 விக்னேஷ் அவரது சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தை குறித்து எதுவும் தெரியாது என்றும், நான் எதையும் பார்க்கவில்லை என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவரது சாட்சியம் அரசு தரப்பு குற்றச்சாட்டிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

24) மேலும் அ.த.சா.7 உதயகுமார் தனது சாட்சியத்தில் கடந்த 26.04.2023ம் தேதி மதியம் 01.30 மணியளவில் நடைபெற்ற இவ்வழக்கு சம்பவம் குறித்து தம்மம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.84/2023 என்ற எண்ணில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், சம்பவ இட சாட்சிகள் மற்றும் இதர சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து பதிவு செய்தது குறித்தும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தது குறித்து சாட்சியம் அளித்து அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 134–ன் படி அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க சாட்சிகளின் எண்ணிக்கை முக்கியம் அல்ல. இவ்வழக்கு சம்பவம் குறித்து அ.த.சா.1, அ.த.சா.2, அ.த.சா.3, அ.த.சா.4, அ.த.சா.5 ஆகியோர்கள் தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பிற்கு ஆதரவாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சாண்றாவணங்கள் மூலமாக எதிரி வெங்கடேஷ் மீது சட்டடப்பிரிவு 323 IPC, 4 of TNPHW Act–ன் கீழான அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25) இறுதியாக எதிரி வெங்கடேஷ் மீது இதச பிரிவுகள் 341, 506(1)–ன் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாக இந்நீதிமன்றம் முடிவுசெய்து மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை பிரிவு 248(1) Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

26) மேலும் எதிரி வெங்கடேஷ் அ.த.சா.–1ஐ தேவிடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டியும், தலை முடியை பிடித்து இழுத்து வலது பக்க காதின் மீது அடித்தார் என்பது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 4 of TNPHW Act–ன் படியான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரி வெங்கடேஷ்–க்கு வழங்க இருக்கும் தண்டனை குறித்து கேட்டபோது எதிரி பின்வருமாறு கூறினார்.

**எதிரி வெங்கடேஷ் –குறைந்தபட்ச தண்டனை வழங்கவேண்டுமென்று** கூறினார்.

27) எதிரியின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. எதிரிக்கு நன்னடத்தை சட்டம் 1958–ன் படியான விதிகள் பொருந்துமா என்று ஆராய்கையில் எதிரி மீது வேறு குற்றவழக்குகள் இல்லை என்பதாலும், எதிரியின் குடும்பம் அவரை நம்பியே இருப்பதாலும், எதிரியின் குடும்ப சூழ்நிலை, வயது, எதிர்காலம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு ஆராய்கையில் எதிரி வெங்கடேஷ் குற்றவாளி நன்னடத்தை சட்டத்தின் கீழ் மன்னித்து விடுதலை செய்தால் இனிவரும் காலங்களில் அவர் திருந்தி வேறு குற்ற சம்பவங்களில் ஈடுபடாமல் இருக்க ஒரு வழியாக இருக்குமென இந்நீதிமன்றம் முடிவுசெய்து எதிரி வெங்கடேஷ்–ஐ குற்றவாளி நன்னடத்தை சட்டம் பிரிவு 4–ன் கீழ் மன்னித்து கீழ்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் விடுதலை செய்கிறது.

28) எதிரி வெங்கடேஷ் இனிவரும் காலங்களில் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடக்கூடாது என்றும், ஒரு வருட காலத்திற்கு நன்னடத்தை அலுவலரின் கண்காணிப்பில் அவர்கள் இருக்கவேண்டும் என்றும், மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாதத்தின் முதல் வேலைநாட்களில் நன்னடத்தை அலுவலர் முன்பு ஆஜராக வேண்டும் என்றும், நன்னடத்தை அலுவலர் 3 மாதங்களுக்கு ஒரு முறை இந்நீதிமன்றத்திற்கு எதிரி வெங்கடேஷ் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், எதிரி வெங்கடேஷ் சொந்தமாகவும் மற்றும் இந்நீதிமன்ற ஆள்வரை

எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடம் கொண்ட ஒரு நபருடனும் ரூ.10,000/–க்கு எந்த குற்ற செயலிலும் ஈடுபடாமல் அமைதிபேணுவேன் என்று ஒருவார காலத்திற்குள் பிணை பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

29) கண்காணிப்பு உத்தரவு நகலை 14 நாட்களுக்குள் சேலம் நன்னடத்தை அலுவலர் திருமதி.யமுனாபிரியா அவர்களிடம் எதிரி வெங்கடேஷ் ஆஜராகி கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

30) மேற்படி நன்னடத்தை கண்காணிப்பு காலக்கட்டத்தில் எதிரி வெங்கடேஷ் வேறு ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபட்டாலோ அல்லது மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை பின்பற்ற தவறினாலோ எதிரி வெங்கடேஷ்–க்கு இதசபிரிவு 294(பி)–ன் படியான குற்றத்திற்கு 3 மாதம் சாதாரண சிறைதண்டனையும், மேலும் எதிரி வெங்கடேஷ்–க்கு இதசபிரிவு 323–ன் படியான குற்றத்திற்கு ஒரு வருடம் சாதாரண சிறை தண்டனையும், மேலும் ரூ.1000/–அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் ஒரு மாதம் சிறைதண்டனையும், மேலும் எதிரி வெங்கடேஷ்–க்கு 4 of TNPHW Act–ன் படியான குற்றத்திற்கு ஆறு மாதம் சாதாரண சிறை தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் பிரிவு 248(2) Cr.P.C–ன் கீழ் உத்தரவிடுகிறது.

31) இவ்வழக்கில் வழக்கு சொத்தாக எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>Particulars under rule 106 of Criminal Rules of Practice 2019.</u>**

| Sl.No | Case No: | : | CC No. 161/2024 | |
|---|---|---|---|---|
| 2. | Name of the Police Station and Crime Number of the offence | : | Thammampatty P.S<br>Cr.No : 84/2023<br>Offence : 341, 294(b), 323, 506 (1) IPC மற்றும் 4 of TNPHW Act | |
| 3. | Name | : | Venkadesh | Description of the |
| 4. | Father's Name | : | Senthilkumar | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | Occupation | : | Driver | Accused |
| 6. | Residence | : | 4th ward, New colony, Sentharapatty post, Gangavalli TK, Salem DT. | |
| 7. | Age | : | 23/2024 | |
| 8. | Occurrence | : | 23.04.2023 | Date of |
| 9. | Complaint | : | 26.04.2023 | |
| 10. | Apprehension | : | 13.06.2024 | |
| 11. | Release on bail | : | 03.05.2023 | |
| 12. | Commitment | : | --- | |
| 13. | Commencement of trial | : | 25.04.2025 | |
| 14. | Closure of trial | : | 17.02.2026 | |
| 15. | Sentence or order | : | 07.04.2026 | |
| 16. | Service of copy of judgment or finding on accused | : | Conviction | |
| 17. | Explanation of delay | | --- | |

**<u>CASE SUMMERY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS IN R.O.C. NO. 814/2020/RG/F1, DT. 07.04.2021</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i | the period of remand of the accused | : | 03.05.2023 | | |
| ii | the date of filing of the complaint /final report in the Court | : | 26.04.2023 | | |
| iii | the date of committal of the case to the Court of Session | : | --- | | |
| iv | the date of questioning of the accused under section 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | : | 28.06.2024 | | |
| v | filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts; except routine petitions like petitions under section 317 of the Code; | : | Nil | | |
| vi | date of examination in-chief and cross-examination of witness | : | P.W1 | 25.04.2025 | 25.04.2025 |
| | | | P.W2 | 25.04.2025 | 25.04.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | P.W3 | 22.05.2025 | 22.05.2025 |
| | | | P.W4 | 22.05.2025 | 22.05.2025 |
| | | | P.W5 | 09.06.2025 | 09.06.2025 |
| | | | P.W6 | 02.02.2026 | 02.02.2026 |
| | | | P.W7 | 17.02.2026 | 17.02.2026 |
| vii | date of examination of the accused under section 313 of the Code | : | 24.02.2026 | | |
| viii | details of abscondence of an accused and his appearance / production, as the case may be | : | --- | | |
| ix | grant of stay by superior courts and the result thereof. | : | Nil | | |

32) மேற்படி தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினி மூலம் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C UDAYASUNDARAM Digitally signed by C UDAYASUNDARAM Date: 2026.04.07 17:22:08 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்.

**பின்இணைப்பு:**

**1. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.1 | சந்தியா | |
| அ.த.சா.2 | நல்லுசாமி | |
| அ.த.சா.3 | முத்தையன் | |
| அ.த.சா.4 | லூர்துமேரி | |
| அ.த.சா.5 | கலியம்மாள் | |
| அ.த.சா.6 | விக்னேஷ் | |

| | |
|---|---|
| அ.த.சா.7 | உதயகுமார் |

**2. அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |

3. **அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்கள்:–**

––இல்லை––

**4. எதிரி தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் சான்றுபொருட்கள்:–**

––இல்லை––

**குறிப்பு:**

1. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையிலிருந்தார்.

3. வழக்கின் முடிவு பற்றிய விவரம் காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.04.07 17:22:13 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்

Note: CSI Order Uploaded date in 07.04.2026